# குழந்தை மேம்பாடும் கற்பித்தல் முறைகளும்

## பகுதி - அ (தாள் - I)


1. தொடக்கக் கல்வியின் ஆரம்பத்தில் குழந்தையின் பண்புகள் (உடல் மற்றும் அறிதல் திறன் சார்ந்தவை) .......... 2 – 10
2. தொடக்கக் கல்வியின் ஆரம்பத்தில் குழந்தையின் பண்புகள் (சமூகம் மற்றும் மனவெழுச்சி சார்ந்தவை) .......... 11 – 22
3. உடல் மற்றும் அறிவு வளர்ச்சி தொடக்கப்பள்ளி ஆண்டுகள் (6 முதல் 10 வயது வரை) .......... 22 – 33
4. சமூக மற்றும் மனவெழுச்சி வளர்ச்சி தொடக்கப்பள்ளி ஆண்டு (6 முதல் 10 வயது வரை) .......... 33 – 39
5. ஆரம்பக் கல்வி நிலையில் மாணவர்களின் ஒழுக்க வளர்ச்சி (6 முதல் 10 வயது வரை) .......... 39 – 43


## பகுதி - ஆ (தாள் - I)


1. கற்றல் .......... 44 – 49
2. கற்றல் வகைகள், நிலைகள் மற்றும் அணுகுமுறைகள் .......... 49 – 54
3. பொதுமைக் கருத்தும் கருத்து உருவாக்கமும் .......... 54 – 56
4. கற்றலுக்கு உதவும் காரணிகள் .......... 56 – 60
5. அறிவை உருவாக்குவதற்காகக் கற்பித்தல் .......... 60 – 63
6. கற்றலும் அறிவும் .......... 63 – 69

கூடுதல் வினாக்கள் .......... 70 – 78

மாதிரி வினாத்தாள்கள் - விடைகளுடன் (1 - 8) .......... 79 – 88




www.surabooks.com

www.surabooks.com

# குழந்தை மேம்பாடும் கற்பித்தல் முறைகளும்

## பகுதி – அ

## 1. தொடக்கக் கல்வியின் ஆரம்பத்தில் குழந்தையின் பண்புகள் (உடல் மற்றும் அறிதல் திறன் சார்ந்தவை)

### தொடக்கக் கல்வியின் ஆரம்பத்தில் குழந்தையின் பண்புகள் - உடல் மற்றும் அறிதல் திறன் சார்ந்தவை:

கற்கும் குழந்தையை ஆசிரியர் நன்கு புரிந்து கொண்டால் வகுப்பறையில் கற்றல் செயலும் கற்பித்தல் செயலும் செம்மையாக நடைபெறும் என்பது திண்ணம். ஆசிரியர்கள் கற்கும் குழந்தையை நன்கு புரிந்துகொள்ள வேண்டுமென்றால் அவர்களின் உடல், உள்ளம், மனவெழுச்சி, சமூக மனப்பான்மை ஆகியவற்றின் வளர்ச்சியைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டும். குழந்தைகளின் வளர்ச்சியைப் பற்றி தெரிந்து கொண்டால்தான் அவர்கள் வளர்ச்சி நிலையில் எந்த இடத்தில் இருக்கின்றார்கள் என்பதற்கு ஏற்றபடி ஆசிரியர் கற்பித்தல் செயல்களைத் திட்டமிட முடியும்.

### உடல் வளர்ச்சி

உடல் வளர்ச்சி என்பது மனித உடலில் உள்ள செல்கள் திசுக்களின் பெருக்கத்தால் ஏற்படும் உயரம் மற்றும் எடை பெருக்கத்தைக் குறிக்கின்றது. மனித உடலின் வளர்ச்சி மற்றும் முதிர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில் மனிதனின் வளர்ச்சியை பின்வரும் 8 பருவங்களாகப் பிரிக்கலாம்.

| | | |
|---|---|---|
| 1. | சிசுப் பருவம் | 0 - 1 ஆண்டுகள் |
| 2. | குறுநடைப் பருவம் | 1 - 3 ஆண்டுகள் |
| 3. | பள்ளி முன் பருவம் | 3 - 6 ஆண்டுகள் |
| 4. | பள்ளிப் பருவம் | 6 - 10 ஆண்டுகள் |
| 5. | குமரப் பருவம் | 10 - 20 ஆண்டுகள் |
| 6. | வாலிபப் பருவம் | 20 - 40 ஆண்டுகள் |
| 7. | வாலிபப் பருவத்திற்கும் முதுமைப் பருவத்திற்கும் இடைப்பட்ட பருவம் | 40 - 60 ஆண்டுகள் |
| 8. | முதுமைப் பருவம் | 60 ஆண்டுகளுக்கு மேல் |

இப்பருவங்களில் 3-6 ஆண்டுகளில் குழந்தைகள் முன்மழலையர் பள்ளியிலும் 6-10 ஆண்டுகளில் தொடக்கப் பள்ளியிலும் கல்வி கற்கின்றனர். நடுவண் அரசும் மாநில அரசும் 14 ஆண்டுகள் வரை உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிக்க வேண்டும் என்று செயல்பட்டு வருகின்றன.

### தொடக்கக் கல்வியின் ஆரம்பத்தில் குழந்தையின் உடல் வளர்ச்சி

பிறந்த குழந்தை சராசரியாக 50 செ.மீ. உயரமும் 3 கி.கி. எடையும் இருக்கிறது. நாளடைவில் குழந்தை உயரத்திலும் எடையிலும் வளர்ச்சியடைகின்றது. குழந்தையின் உடல் வளர்ச்சி ஒரு திட்டமிட்ட போக்கை கொண்டுள்ளது. உடல் வளர்ச்சி முதலில் தலையிலிருந்து தொடங்கி பாதங்களை நோக்கி வருகின்றது. பின்னர் உடலின் மைய அச்சிலிருந்து இரு ஓரங்களையும் நோக்கி வருகின்றது. உடல் வளர்ச்சியில் எலும்புகளின் வளர்ச்சியும் தசை வளர்ச்சியும் முக்கியக் காரணிகளாகும். குழந்தைகளின் எலும்புகள் உறுதியற்றதாக காணப்படுகின்றது. எனவே, குழந்தைகளின் எலும்பு மண்டலம் நெகிழ்வு தன்மை உடையதாக இருக்கின்றது. தசை வளர்ச்சியைப் பொருத்தவரை குழந்தைகள் பிறக்கும்போது தசை நாண்கள் நீளத்திலும், பருமனிலும் அதிகரிக்கின்றன. உடலின் எல்லா பாகங்களும் ஒரே வீதத்தில் வளர்ச்சி அடைவதில்லை. வெவ்வேறு பாகங்கள் வெவ்வேறு வீதத்தில் வளர்ச்சி அடைகின்றன.

உடல் வளர்ச்சியின்போது குழந்தைகளின் இயக்கங்களும் வளர்ச்சி (Motor Development) அடைகின்றன. பள்ளி முன் பருவத்தில் அதாவது குழந்தை தொடக்கக் கல்வி கற்க பள்ளிக்கு வரும்முன் அடிப்படையான உணவு உண்ணுதல், பேசுதல், பல்துலக்குதல், ஆடை அணிதல், பென்சிலை பிடித்து எழுதுதல், பந்து விளையாடுதல் போன்ற உடலியக்கங்களை அடைந்து விடுகின்றனர். பள்ளிப் பருவத்தில் இவ்வியக்கங்கள் கூர்மையாக்கப்படுகின்றன.

### உடல் வளர்ச்சியை பாதிக்கும் அடிப்படைக் காரணிகள்

அடிப்படையில் தனிமனித உடலின் கட்டமைப்பும், சுற்றுப்புறச் சூழ்நிலையும் அவனது வளர்ச்சியைப் பாதிக்கும் காரணிகளாகும். உடலின் கட்டமைப்பு என்பதில் மனித உடலின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்தும் மிக முக்கியமான இருபெரும் அமைப்புகளான நாளமில்லாச் சுரப்பிகள் மண்டலமும், நரம்பு மண்டலமும் அடங்கும். இவை இரண்டும் இணைந்து செயல்பட்டு உடலின் வளர்சிதை மாற்றத்திற்கு காரணமாக அமைகின்றன. இதனால் உடலின் உள்ளமைப்புகள் சமநிலையில் இருப்பதோடு உடலில் செல்களும் தொடர்ந்து நல்ல நிலையில் செயல்பட முடிகிறது. இது உடல் வளர்ச்சிக்கும், இயக்கங்களுக்கும் காரணமாகின்றது.

### உடல் வளர்ச்சியில் நாளமில்லாச் சுரப்பிகளின் பங்கு

நாளமில்லா சுரப்பிகள் மனித உடலில் பல்வேறு இடங்களில் அமைந்து ஹார்மோன்கள் என்னும் வேதிப் பொருளைச் சுரந்து உடல் வளர்ச்சிக்கு நரம்பு மண்டலத்துடன் துணை நிற்கின்றது. எடுத்துக்காட்டாக பிட்யூட்ரியின் முன்பகுதியிலிருந்து சுரக்கும் வளர்ச்சி ஹார்மோன் எலும்பு மற்றும் தசை திசுக்களின் வளர்ச்சியை கட்டுப்படுத்துகின்றது. இப்பகுதியில் சுரக்கும் பிற ஹார்மோன்கள் மற்ற நாளமில்லாச் சுரப்பிகளின் செயல்பாட்டினைக் கட்டுப்படுத்துகின்றன.

நரம்பு மண்டலத்தின் செயல்பாட்டால் அட்ரினல் சுரப்பியின் உட்பகுதி **(Medulla)** அட்ரினலின் என்னும் ஹார்மோனை சுரந்து உடலானது அவசர காலங்களை சமாளிக்க உதவுகின்றது. அட்ரினலின் இதயத்தின் செயல்பாட்டையும், இரத்த அழுத்தத்தையும் கட்டுப்படுத்துவதுடன் இரத்தக் குழாய்களும், தசைகளும் சுருங்கி விரிவதற்கு உதவுகின்றது.

தைராய்டு சுரப்பியில் சுரக்கும் தைராக்ஸின் ஆக்ஸிஜன் உட்கிரகித்தலை அதிகப்படுத்துவதுடன் வளர்சிதை மாற்றச் செயலைக் கட்டுப்படுத்துகின்றது. மேலும் எலும்புகள் மற்றும் நரம்பு மண்டலத்தின் வளர்ச்சியையும் தூண்டுகின்றது. பாரா தைராய்டு சுரப்பிகளில் சுரக்கும் ஹார்மோன்கள் இரத்தத்தில் உள்ள கால்சியம் மற்றும் பாஸ்பரஸ் அளவினைக் கட்டுப்படுத்தி எலும்பு வளர்ச்சியைத் தூண்டுகின்றது.

கணையத்தில் சுரக்கும் இன்சுலின் கார்போஹைட்ரேட், புரோட்டீன், கொழுப்பு ஆகியவற்றின் வளர்சிதை மாற்றத்திற்கும் குளுக்கோஸ் உட்கிரகிக்கும் அளவைக் கட்டுப்படுத்தி புரோட்டீன் உருவாவதற்கும் கொழுப்பு சேகரிக்கவும் பயன்படுகின்றது.

### உடல் வளர்ச்சியில் காணப்படும் குறைபாடுகள்

நாளமில்லாச் சுரப்பிகளில் சுரக்கும் ஹார்மோன் தேவையான அளவுக்குக் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ சுரக்கும்போது, குழந்தையின் வளர்ச்சியில் குறைபாடுகள் ஏற்படுகின்றன. உதாரணமாக குழந்தைப் பருவத்தில் பிட்யூட்ரியில் முன்பகுதியில் சுரக்கும் வளர்ச்சி ஹார்மோன் அளவுக்கு அதிகமாகச் சுரக்குமானால் அசாதாரண உடல் பருமன் (Gigantism) உண்டாகும். அசாதாரண உடல் பருமன் உள்ள குழந்தைகள் வயதிற்கு ஏற்ற வளர்ச்சி இல்லாமல் உயரம், பருமன், எடை ஆகியவற்றில் அதிகமான வளர்ச்சியைப் பெற்றிருப்பர். வளர்ச்சி ஹார்மோன் தேவையான அளவுக்குக் குறைவாக சுரக்குமானால் குள்ளத்தன்மை **(Dwarfism)** ஏற்படுகின்றது. குள்ளத்தன்மை குறைபாடுடைய குழந்தைகள் வளர்ச்சிக்



enquiry@surabooks.com Ph: 9840455556

குன்றி எவ்வளவு வயது ஆனாலும் உடல் வளர்ச்சி அடையாமல் இருப்பர். குழந்தைகளிடத்தில் தைராக்ஸின் குறைவாக சுரக்குமானால் கிரிடினிசம் (Cretinism) ஏற்படும். இக்குறைபாடுடைய குழந்தைகளின் மைய நரம்பு மண்டலத்தின் வளர்ச்சியில் குறைபாடு ஏற்பட்டு குழந்தைகள் உடல் மற்றும் உள்ள செயல்பாடுகளில் மந்தமாக காணப்படுவர். தைராக்ஸின் அதிகமாக சுரக்குமானால் முன் கழுத்து கழலை (Goitre) என்னும் நோய் ஏற்படுகிறது. இந்நோய் ஏற்பட்ட குழந்தையின் தைராய்டு சுரப்பி பருத்து முன்கழுத்து பகுதி வீக்கம் அடைந்து காணப்படும். கண் பிதுக்கம், உடல் நடுக்கம், வியர்த்தல், நாடித்துடிப்பு மற்றும் இதயத்துடிப்பு அதிகமாதல், நரம்புகளில் எரிச்சல் போன்ற அறிகுறிகள் தென்படும். இவ்வாறு நாளமில்லாச் சுரப்பிகள் குழந்தையின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

### நரம்பு செல்லின் வளர்ச்சி

நரம்பு மண்டலம், மூளை, தண்டுவடம் ஆகியவற்றைக் கொண்ட மையநரம்பு மண்டலம். இவற்றிற்கு வெளியில் உள்ள நரம்பு திசுக்களைக் கொண்ட வெளி நரம்பு மண்டலம் என்னும் இரு பெரும் பிரிவுகளைக் கொண்டு இயங்குகின்றது. குழந்தையின் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றும் மற்றோர் அடிப்படை அமைப்பு நரம்பு மண்டலம் ஆகும். நரம்பு மண்டலத்தின் அடிப்படை அலகு நரம்பு செல் அல்லது நியூரான் (Neuron) எனப்படும். நியூரான்கள் வெளியுலக தூண்டல்களை மைய நரம்பு மண்டலத்திற்கு எடுத்துச் செல்லவும், மைய நரம்பு மண்டலத்திலிருந்து கட்டளைகளை உடலின் பல உறுப்புகளுக்கு கொண்டு சென்று உடலியக்கங்களை ஏற்படுத்துவதற்கும் காரணமாக அமைகின்றன. இவ்வாறு நியூரான்கள் நரம்பு மண்டலத்தின் தகவல் தொடர்பை ஏற்படுத்தும் இணைப்புகளாக விளங்குகின்றன.

நியூரான்கள் 1 மி.மீ.க்குக் குறைவான நீளம் முதல் சில அடி நீளம் வரை நீண்டு இருக்கின்றன. தண்டுவடத்தையும், குதிங்காலினையும் இணைக்கும் நியூரான்களில் ஆக்ஸான் சில அடி நீளமும் மூளையில் 1 மி.மீ.க்கு குறைவாகவும் இருக்கும். நியூரான்களின் செயல்பாட்டினைப் பொறுத்து அவற்றை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

- புலனுணர்ச்சி நியூரான் (Sensory Neuron)
- இயக்க நியூரான் (Motor Neuron)
- இணைப்பு நியூரான் (Inter Neuron)

## குறியீட்டுச் சிந்தனையும், தர்க்கமுறை சிந்தனையின் எல்லையும்

### குறியீட்டுச் சிந்தனை

சில சமயங்களில் நமது வீட்டில் குழந்தைகள் சிறிய காகித துண்டைக் கொடுத்து இதுதான் பயணச்சீட்டு, வைத்துக் கொள்ளுங்கள் என்றும், வெறும் குவளையைக் கொடுத்து இதுதான் தேநீர், குடியுங்கள் என்றும் விளையாடுவதைப் பார்த்திருப்பீர்கள். இங்கு குழந்தை பயணச்சீட்டிற்கு காகிதத்தையும், தேநீருக்கு வெறும் குவளையையும் பிரதியீடு அதாவது குறியீடு (Symbol) செய்கின்றது. குழந்தையின் இத்தகைய சிந்தனையைக் குறியீட்டுச் சிந்தனை என்கிறோம். குழந்தைகள் தாங்கள் புரிந்துகொண்ட வார்த்தைகள், எண்கள், உருவங்கள் போன்ற குறியீடுகளை உள்ளத்தின் உபயோகப்படுத்தும் திறனே குறியீட்டுச் சிந்தனை எனப்படும்.

### குறியீட்டுச் சிந்தனையின் தன்மை

இடைவெளி, காரண காரியம், அடையாளம் காணுதல், வகைபாடு செய்தல் மற்றும் எண்ணுருக்கள் இவற்றை குழந்தைகள் புரிந்துகொள்வதன் மூலம் அவர்களின் குறியீட்டுச் சிந்தனை வளர்ச்சி அடைகிறது. குழந்தைகள் சிலவற்றை சிசு பருவத்திலிருந்தே புரிந்துகொள்ளத் தொடங்கிவிடுகின்றனர். மற்றவை முன் குழந்தைப் பருவத்தில் வளர ஆரம்பிக்கின்றன. எனினும் பின் குழந்தை பருவம் வரை இந்த வளர்ச்சி முழுமையடைவதில்லை.

இவ்வாறான புலன் உணர்ச்சி அல்லது செயல் குறிப்பு இல்லாமல் மனத்தளவில் நடைபெறுவது குறியீட்டுச் சிந்தனையின் தன்மையாகும். குறியீடுகளைப் பயன்படுத்துதல் உலகில் அனைவருக்கும் உள்ள பொதுவான திறமை. பொருள்களுக்குக் குறியீடு கொடுப்பதன் மூலம் பொருள்கள் கண்முன் இல்லாமலேயே குழந்தைகள் அவற்றைப் பயன்படுத்தி சிந்திக்க முடிகின்றது. நினைவில் கொண்டுவர முடிகின்றது. எடுத்துக்காட்டாக ஆசிரியர் மலர் (குறியீடு) ஒன்றை வரைக என்றதும், குழந்தையின் முன் ஒரு மலர் இல்லாமலேயே குழந்தை ஒரு மலரை வரைகின்றது.

### தர்க்கமுறை சிந்தனை

குறியீட்டுச் சிந்தனையின் வளர்ச்சி தர்க்கமுறை சிந்தனையாகும். தர்க்கமுறை சிந்தனை என்பது குறியீடுகளில் வரிசைத் தொடரை ஏற்படுத்தி ஒரு முடிவையெடுத்தல் அல்லது மதிப்பீடு செய்தல் ஆகும். ஒரு குழந்தை 7, 8 ஆண்டுகளில் வரிசைத் தொடர்பு கிரமப்படி சிந்திக்கத் தொடங்குகிறது என்று **பியாஜே** குறிப்பிடுகின்றார்.

### இடைவெளி தர்க்கச் சிந்தனை

குறியீட்டுச் சிந்தனை வளர்ச்சி குழந்தைகள் பொருள்களுக்கு இடையே உள்ள இடைவெளி தொடர்பு பற்றி சரிவர தெரிந்துகொள்ள உதவுகின்றது. 19 மாதங்களில் குழந்தை ஒரு படம் என்பது ஒரு பொருளின் குறியீடு என்று புரிந்து கொள்கின்றது. அதில் இடைவெளி தொடர்புப் பற்றியும் சிந்திக்கிறது.

### காரண காரிய தர்க்க சிந்தனை

வினைக்கும் பயனுக்கும் இடையேயுள்ள காரண காரிய தொடர்பை சிறு குழந்தைகள் அறிந்திருந்தாலும் இரண்டு ஆண்டுகள் வரை இந்தத் தர்க்கமுறை சிந்தனை வளர்ச்சி பெறவில்லை. காரண காரிய தொடர்பு இருக்கிறதோ இல்லையோ அவர்கள் ஒரே சமயத்தில் நடக்கும் இரு நிகழ்ச்சிகளைத் தொடர்புபடுத்திவிடுகின்றனர். ஒன்று நிகழந்ததன் அடிப்படையில் தான் மற்றொன்றும் நிகழ்ந்தது என்ற எண்ணுகின்றனர்.

### அடையாளம் கண்டுகொள்ளுதலும் வகைபாடு செய்தலுமான தர்க்க சிந்தனை

மனிதர்கள் மற்றும் பொருள்கள் (எ.கா. வாகனங்கள்) வடிவத்திலும், அளவிலும், தோற்றத்திலும் மாறுபாட்டாலும் எல்லாம் மனிதர்கள்தாம் அல்லது பொருள்கள்தாம் என்று பொருள்களையும், மனிதர்களையும் குழந்தைகள் தர்க்கமுறையில் சிந்தித்து அடையாளம் கண்டுகொள்கின்றனர். குழந்தைகள் மணல் பரப்பில் காணப்படும் கூழாங்கற்களில் இது குரங்கின் முகம் போன்று இருக்கின்றது அது குரங்கின் முகம் போன்று இல்லை என்று அடையாளம் கண்டு கொள்கின்றனர் அல்லது வகைப்படுத்துகின்றனர். இதற்கு தர்க்கச் சிந்தனை உதவுகின்றது.

### எண்ணியல் தர்க்கச் சிந்தனை

பள்ளிமுன் பருவத்தில் (3-6 ஆண்டுகள்) குழந்தைகள் எண்களைப் பற்றிய 5 விதிகளை ஓரளவு புரிந்துக் கொள்கின்றனர்.

- ஒரு பொருளுக்கு ஓர் எண்ணைத் தொடர்புபடுத்துவது.
- நிலையான எண்வரிசை 1, 2, 3, 4, 5, ............
- எந்த பொருளிலிருந்து எண்ணத் தொடங்கினாலும் மொத்த எண்ணிக்கை சமம்.
- பொருள்களின் மொத்த எண்ணிக்கை கடைசிப் பொருளின் எண்ணாகும்.
- இந்த நான்கு விதிகளும் எந்தப் பொருளுக்கும் பொருந்தும்.

குழந்தைகள் முதலில் இந்த விதிகளைப் புரிந்துகொண்டு அதன் அடிப்படையில் எண்ணத் தொடங்குகின்றனர் என்று முன்பு ஆராய்ச்சியாளர்களால் நம்பப்பட்டது. ஆனால் தற்போது குழந்தைகள் எண்ணக் கற்றுக்கொண்ட பின்னரே இந்த விதிகளைப் புரிந்துகொள்கின்றனர் என்ற கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## அறிதல் திறன் வளர்ச்சி

### புலன் இயக்கப் பருவம் [0-2 ஆண்டுகள்]

அறிதல் திறன் வளர்ச்சியில் குழந்தை பிறந்தது முதல் இரண்டு ஆண்டுகள் வரை உள்ள பருவம் புலன் இயக்கப் பருவம் எனப்படும். ஆரம்ப நாட்களில் குழந்தையின் செயல்கள் பார்த்தல், கேட்டல் என்ற புலன் உணர்வுகளுடன் பால் குடித்தல், உறங்குதல், அழுதல், பொருள்களைப் பிடுங்குதல் போன்ற இயக்கங்களுடன் நின்றுவிடுகின்றது. இவையாவும் மறிவினைச் செயல்களாக உள்ளன. நாளடைவில் நரம்பு மண்டலம்



enquiry@surabooks.com Ph: 9840455556

www.surabooks.com



வளர வளர குழந்தை புலன் உணர்வுகளையும், உடல் இயக்கங்களையும் ஒருங்கிணைப்பதன் மூலம் உலகத்தைப் பற்றி புரிந்துகொள்கிறது. அதனால் இப்பருவத்தினை புலன் இயக்கப் பருவம் என்றார் **பியாஜே.**

## மனச் செயல்பாட்டுக்கு முந்தைய பருவம் (2-7 ஆண்டுகள்)

இப்பருவத்தில் குழந்தைகள் மன உருவங்களை பயன்படுத்துவதில் படிப்படியாக முன்னேறுகின்றனர். அதே சமயத்தில் குழந்தையின் மொழியும் வளர்ச்சி அடைகின்றது. இதனால் குழந்தை இந்த உலகை வார்த்தைகள் மூலம் வருணிக்கத் தொடங்குகிறது. இந்த வார்த்தைகளையும், மன உருவங்களையும் பயன்படுத்தும் திறன் வளர்ச்சி அடைந்த குறியீட்டுச் சிந்தனையை பிரதிபலிப்பதோடு புலன் உணர்ச்சிகளுக்கும், செயல்களுக்கும் அப்பாற்பட்ட தொடர்புகளையும் பிரதிபலிக்கின்றது. மன உருவங்களைக் கொண்டு சிந்தனைகளைத் தொடர்ந்தாலும் இப்பருவத்தில் குழந்தையின் அறிதல் திறன் முழுவளர்ச்சி அடைவதில்லை. இப்பருவத்தில் குழந்தைகளின் சிந்தனைகளில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன.

இப்பருவத்தில் அறிதல் திறனில் ஓரளவு மன உருவங்களைப் பயன்படுத்தும் திறன் வளர்ந்திருந்தும் அது முழுமையாக வளர்ச்சி அடையாமல் ஆனால் வளர்ச்சியை நோக்கிச் செல்வதால் வளர்ச்சி பெறுகின்றது. இவ்வாறு அறிதல் திறன் வளர்ச்சி இயற்கையான வளர்ச்சி என்றாலும் தொடக்கப் பள்ளிக்கு வரும்போது குழந்தைகளின் அறிதல் திறனில் தேவையான பயிற்சி அளித்து அந்த வளர்ச்சியை தூண்டுபவரும் செம்மைப்படுத்துபவரும் ஆசிரியரே. அதனால் அறிவுக் கண்ணைத் திறப்பவன் ஆசான் என்னும் முதுமொழி எவ்வளவு பொருத்தமுடையதாக இருக்கின்றது என்று பாருங்கள்.

## குழந்தைகளின் மொழி வளர்ச்சி

பிறந்த குழந்தை உடல் வளர்ச்சி மற்றும் அறிதல் திறன் வளர்ச்சி அடைந்ததும் தனது முதலாவது பிறந்த நாளில் (10-14 மாதங்களில்) அடையாளம் காணக்கூடிய தெளிவான உச்சரிப்புடன் கூடிய முதல் சொல்லைப் பேசுகின்றது. அம்மா, தாத்தா, அத்தை போன்ற சொற்கள் குழந்தையின் முதல் சொற்களாக இருக்கின்றன.

18 மாதங்கள் வரை குழந்தை ஒரு தனியான சொல்லைப் பேசி தன் கருத்தைத் தெரிவிக்கிறது. அம்மா எனக்கு பலூன் வேண்டும், அம்மா இங்கே வா, அம்மா எங்கே போன்ற எல்லாவற்றிற்கும் குழந்தை அம்மா என்ற ஒரு சொல்லை மட்டும் பேசுகின்றது. நாமும் குறிப்பால் உணர்ந்து கொள்கிறோம். 18-24 மாதங்களில் குழந்தை சிறு சிறு வாக்கியங்களை பேசத் தொடங்குகிறது.

குழந்தைப் பருவத்தில் மொழி வளர்ச்சியை விட வேறு எந்த மாற்றமும் வேகமாக நிகழ்வதில்லை. உடல் இயக்கங்கள் போலவும், புலக்காட்சியைப் போலவும் மொழி வளர்ச்சி, உதடுகள், நாக்கு இவற்றின் அசைவுகளுக்கு காரணமான தசைகளின் மீது கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் முதிர்ச்சி மற்றும் அனுபவம் ஆகியவற்றைச் சார்ந்து அமைகின்றது.

## குடும்பப் பின்னணியில் குழந்தையின் மொழி வளர்ச்சி

குழந்தைகள் பள்ளிக்கு ஓரளவு மொழி வளர்ச்சியைத் தங்கள் குடும்பப் பின்னணியிலிருந்து பெற்று வருகின்றனர். குழந்தையின் மொழியில் குடும்பத்தில் உள்ள மற்ற உறுப்பினர்கள் பேசும் மொழியின் தாக்கம் இருக்கிறது. குடும்பப் பின்னணியை பொறுத்து குழந்தை பயன்படுத்தும் ஒலிப்பு முறை, வாக்கியத்தில் அழுத்தம் கொடுக்கும் இடம் ஆகியவற்றில் வேறுபடுகிறது. குடும்பப் பின்னணியில் பூவா, பப்பு, மம்மு உணவைக் குறிக்கும் சொற்கள் என்னும் சொற்களைக் குழந்தை தன் தாயிடமிருந்து கற்றுக் கொள்கின்றது. இதனைக் குழந்தையின் தாயார் மொழி (Home Language) என்கிறோம். குழந்தைகள் பயன்படுத்தும் சொற்கள் குழந்தைகளின் வட்டார வழக்குகளுக்கு ஏற்றபடி மாறுபடுகிறது. மொழி வளர்ச்சியில் குழந்தைகள் தங்கள் வட்டாரங்களில் வழங்கப்படும் மொழியையே முதலில் கற்றுக் கொள்கின்றனர். அதனால் இந்த மொழியுடன் குழந்தைகள் பள்ளிக்கு வருகின்றனர். பள்ளிப் பருவத்தில் இது சிறிது சிறிதாக மறைந்துவிடுகின்றது.

குடும்பத்தின் பொருளாதார நிலையைப் பொறுத்தும், குழந்தையின் மொழி வளர்ச்சி வேறுபடுகின்றது. எடுத்துக்காட்டாக பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களில் இருந்து வரும் குழந்தைகளுக்கு குறைவான அனுபவங்களே இருப்பதால் அவர்களின் சொல்லாட்சி திறன் பொருளாதாரத்தில் முன்னேறிய குடும்பங்களில் இருந்து வரும் குழந்தைகளின் சொல்லாட்சி திறனை விட குறைவாகவே இருக்கும்.

## குழந்தையின் வட்டார மொழிவழக்கு

சில வட்டாரங்களில் இடது கை பக்கமாகச் செல் என்பதை பீச்சாங்கை பக்கமாகச் செல் என்றும், வேறு சில வட்டாரங்களில் ஒரட்டு கை பக்கமாகச் செல் என்றும் வழங்கப்படுகின்றது. சில இடங்கில் தவளையை தவக்களை என்றும் கூறுகின்றனர். இவ்வாறே சொற்களின் உச்சரிப்பிலும் வட்டார அளவில் வேறுபாடு காணப்படுகின்றது. பழம் என்பதை சில வட்டாரங்களில் பயம் என்றும் சில வட்டாரங்களில் பளம் என்றும் கூறுகின்றனர். ஆசிரியர்கள் தங்கள் வட்டாரத்தில் குழந்தைகளின் பேச்சுகளை உற்றுநோக்கி அவர்களின் தாயார் மொழியை அறிந்து அவற்றிற்கு இணையான தாய்மொழியினை சரியான தமிழ் சொற்களில் குழந்தைகளுக்கு பயிற்சி அளிக்க வேண்டும்.

## குழந்தையின் மொழி வளர்ச்சியில் தொலைக்காட்சியின் தாக்கம்

தற்காலத்தில் தொலைக்காட்சி பெட்டி ஒரு முதன்மையான தகவல் தொடர்பு சாதனமாக மாறிவிட்டது. சிறியவர் முதல் பெரியவர் வரை தொலைக்காட்சி பெட்டியின் முன் அமர்ந்து மணிக்கணக்கில் நிகழ்ச்சிகளை பார்க்கத் தொடங்கி விட்டனர். மொழி வளர்ச்சியில் வேகத்தை பெற்றிருக்கும் குழந்தை தொலைக்காட்சியில் பேசப்படும் மொழியை எளிதாக உள்வாங்கி கொள்கின்றது.

## குழந்தையின் மொழியில் காணப்படும் குறைபாடுகள்

### குறைபடப் பொதுமைப் படைத்தல்


விலங்கு என்றால் என்ன? என்று ஆறு வயதுக் குழந்தையைக் கேட்டால் அதற்கு ஒரு தலையிருக்கும், வால் இருக்கும், கால், பாதம், கண், மூக்கு, அடர்ந்த முடி கொண்டிருக்கும் என்று பதில் கூறுகிறது. இக்குழந்தை விலங்கு என்னும் பொதுமைக் கருத்தின் எல்லையை குறுகலாக்கி குதிரை, நாய் போன்ற பாலூட்டிகள் மட்டுமே விலங்குகள், மீன், பூச்சி போன்றவை பறவையினங்கள், விலங்குகள் அல்ல என்று நினைத்து விடுகின்றனர். இவ்வாறு சொற்களுடன் இணையும் பொருளைக் குறுகலாக்கி அச்சொல் பயன்படும் பல சூழ்நிலைகளை விலக்கிவிடுகின்றனர். இதற்கு குறைபடப் பொதுமைப் படைத்தல் என்று பெயர்.

### மிகைபடப் பொதுமைப் படைத்தல்

சொல்லின் பொருளை மிகவும் பெரிதாக்கி அது பொருந்தாத இடங்களிலும் பயன்படுத்துமாறு செய்துவிடுகின்றனர். பூச்சிகளுக்கு சில உதாரணம் கொடு என்றால் மண்புழுவையும், பட்டியலில் சேர்த்து விடுகின்றனர். ஆனால், அது ஊர்வன இன வகையாகும். எனவே, அது பூச்சியினத்தைச் சேராது. இதற்கு மிகைபட பொதுமைப் படைத்தல் என்று பெயர். இவ்வாறே இலக்கண விதியின் பயன்பாட்டை மிகவும் பெரிதாக்கி அது பொருந்தாத இடத்திலும் பயன்படுத்துவர். எடுத்துக்காட்டாக அம்மாவுக்கு அப்பாவுக்கு என்பது போலவே குழந்தைகள் எனக்கு என்பதை நானுக்கு என்று மிகைபட பொதுமை படைத்தல் பிழையைச் செய்வார்கள்.

## மொழி வளர்ச்சிக்கும், அறிதல் திறன் வளர்ச்சிக்கும் இடையே உள்ள வேறுபாடு

பின்வரும் படம் குழந்தைகளின் மொழி வளர்ச்சிக்கும், அறிதல் திறன் வளர்ச்சிக்கும் இடையே உள்ள நெருங்கிய தொடர்பை விளக்குகிறது.






enquiry@surabooks.com Ph: 9840455556

www.surabooks.com



23. **எது கல்வி உளவியலாளர்களின் ஆய்வுக்கூடம் ஆகும்?**
A) திடல் B) கள ஆய்வு
C) பள்ளி வகுப்பறை D) தேர்வு **விடை : (C)**

24. **கல்விச் சூழலில் மாணவர்களுக்கு அடுத்த நிலையில் வருபவர் யார்?**
A) பிறர் B) குழந்தை
C) பெற்றோர் D) ஆசிரியர் **விடை : (D)**

25. **வகுப்பறையில் யாருக்கு முக்கிய இடம் அளிக்கப்படுகிறது?**
A) கற்பவருக்கு B) செயல்படுபவருக்கு
C) நிர்வகிப்பவருக்கு D) பயிற்சியாளருக்கு **விடை : (A)**

26. **எதற்கு முன் ஆசிரியர் தன் மாணவர்கள் பற்றிய இயல்புகளைத் தெரிந்துவைத்துக் கொள்ளுதல் வேண்டும்?**
A) அனுபவிப்பதற்கு B) கற்பிப்பதற்கு
C) கவனிப்பதற்கு D) செயல்படுவதற்கு **விடை : (B)**

27. **யாரிடையே தனிநபர் வேற்றுமைகள் இருப்பதனை ஆசிரியர்கள் உணர்ந்து செயல்படுதல் வேண்டும்?**
A) சுற்றத்தாரிடையே B) பிறரிடையே
C) மாணவர்களிடையே D) மூவரும் **விடை : (C)**

28. **கல்வி உளவியலுக்கு அடுத்து ஆராயப்படுவது எது?**
A) செயல் முறை B) பயிற்சி முறை
C) அனுபவ முறை D) கற்கும் முறை **விடை : (D)**

29. **ஒவ்வொரு மாணவருக்கும் ஏற்ற வகையில் என்ன செய்வது சிறப்பான முறையாகும்?**
A) அனுபவிப்பது B) பயிற்சி கொடுப்பது
C) கற்பிப்பது D) செயல் படுத்துவது
**விடை : (C)**

30. **ஒருவன் பிறரைக் கவனித்து அறிந்து கொள்ளும் முறை எது?**
A) உற்று நோக்கல் முறை B) விரிவாக்கம்
C) கவன முறை D) செயல் முறை **விடை : (A)**

## வினாத்தாள் – 6

1. **யார் பெற்றோரைப் போல் நுண்ணறிவு உடையவராக இருப்பதில்லை?**
A) குழந்தை B) தந்தை
C) தாய் D) ஆசிரியர் **விடை : (A)**

2. **குழந்தைகளிடம் எது மாறுபடுகிறது?**
A) திறன் B) மதிப்பீடு
C) செயல் D) நுண்ணறிவு **விடை : (D)**

3. **ஆசிரியர், மாணவர்களுக்கு எதுவும் சூழ்நிலையும் அவசியமானது?**
A) ஊக்கப்படுதல் B) மரபு
C) செயல்படுதல் D) பின்பற்றுதல் **விடை : (B)**

4. **வெறுப்பூட்டும், மனதுக்குப் பிடிக்காத நிகழ்ச்சியைக் குறிப்பது எது?**
A) பாராட்டு B) புகழ்
C) தண்டனை D) வெகுமதி **விடை : (C)**

5. **ஒருவரது மனநிலையைக் குறிப்பது எது?**
A) மனப்பான்மை B) கவனம்
C) ஆர்வம் D) செயல் **விடை : (A)**

6. **யாருடைய கற்றல் முன்னேற்றத்தை அவர்களுக்கு உடனுக்குடன் தெரிவித்தல் வேண்டும்?**
A) பெற்றோர்களின் B) மாணவர்களின்
C) ஆசிரியர்களின் D) நண்பர்களின் **விடை : (B)**

7. **முடிந்தவரை எதற்கு செயல்திட்ட முறையை பயன்படுத்துதல் வேண்டும்?**
A) செயலுக்கு B) ஊக்கம் பெற
C) கற்பித்தலுக்கு D) பயன் பெற **விடை : (C)**

8. **எது பல்வேறு பாடங்களையும் செயல்களையும் ஒருங்கிணைக்கிறது?**
A) நடைமுறை B) பயிற்சிமுறை
C) அனுபவமுறை D) செயல்திட்டமுறை
**விடை : (D)**

9. **ஆசிரியர் எதில் ஏற்பட வேண்டிய வரிசை முறையை முதலில் திட்டமிட்டுக் கொள்ளுதல் வேண்டும்?**
A) கற்றலில் B) பார்த்தலில்
C) செயல்படுதலில் D) கவனித்தலில்
**விடை : (A)**

10. **யாருக்கு ஆக்கத்திறன் செயல்முறைகளும், நல்ல சூழ்நிலைகளும் அளிக்கப்படுவது அவசியமாகும்?**
A) பெற்றோருக்கு B) ஆசிரியருக்கு
C) குழந்தைகளுக்கு D) மூவருக்கும் **விடை : (C)**

11. **யார் தானாகத் தனியாக விளையாடும் விளையாட்டுக்கள் தனி விளையாட்டுக்கள் எனப்படும்?**
A) ஆசிரியர்கள் B) குழந்தைகள்
C) பெற்றோர்கள் D) பிறர் **விடை : (B)**

12. **எதனை கேட்கும் பொழுது குழந்தைகள் பல புதிய சொற்களையும் அவைகளின் பொருளையும் அறிந்து கொள்கின்றனர்?**
A) செயல் B) கருத்து
C) கதைகள் D) படம் **விடை : (C)**

13. **யார் புதிய புதிய விளையாட்டுக்களை குழந்தைகளுக்குக் கற்றுத்தர வேண்டும்?**
A) நிர்வாகம் B) பெற்றோர்
C) பிறர் D) ஆசிரியர் **விடை : (D)**

14. **குழந்தைகள் கதைகளைக் கேட்டு கோர்வையாகத் திரும்பச் சொல்லும் பயிற்சி எதனை அதிகரிக்கச் செய்கிறது?**
A) நினைவாற்றலை B) வளர்ச்சியை
C) முன்னேற்றத்தை D) ஊக்கத்தை **விடை : (A)**

15. **யார் கதை சொல்லும்பொழுது குழந்தைகள் நிகழ்ச்சிகளை மனதில் கற்பனை செய்து கொள்கின்றனர்?**
A) பெற்றோர் B) ஆசிரியர்
C) பிறர் D) மூவரும் **விடை : (B)**

16. **எப்பயிற்சி குழந்தைகளின் கற்பனைத் திறன் வளர உதவும்?**
A) படம் B) கருத்து
C) கதை D) செயல் **விடை : (C)**

17. **குழந்தையின் எத்தன்மையைப் பாடல்கள் வளர்க்கின்றன?**
A) செயல்படுத்தும் B) புரியும்
C) பார்க்கும் D) ரசிக்கும் **விடை : (D)**

18. **யாருடைய அறிவு வளர்ச்சிக்குப் பாடல்கள் பெரிதும் உதவுகின்றன?**
A) குழந்தைகளின் B) பெற்றோரின்
C) ஆசிரியரின் D) பிறரின் **விடை : (A)**

19. **யாருடைய உற்சாகத்தைப் பாடல்கள் அதிகரிக்கின்றன?**
A) பெற்றோரின் B) குழந்தைகளின்
C) சுற்றத்தாரின் D) பிறரின் **விடை : (B)**

20. **எதன்மூலம் குழந்தைகள் எளிதாக புரிந்து கொள்கின்றனர்?**
A) பயிற்சியளித்தல் B) கவனித்தல்
C) செய்துகாட்டல் D) புரியவைத்தல் **விடை : (C)**

21. **யார் கற்பனைத் திறன் மிக்கவர்கள்?**
A) மாணவர் B) பயிற்சியாளர்
C) பிறர் D) குழந்தைகள் **விடை : (D)**



enquiry@surabooks.com Ph: 9840455556

www.surabooks.com



**22. எது வலுவான கற்றலுக்கும் ஆழ்ந்த புரிதலுக்கும் வழி வகுக்கும்?**
A) தனிச்செயல்கள் B) நட்புச்செயல்கள்
C) (A) மற்றும் (B) D) குழுச்செயல்கள் **விடை : (D)**

**23. எதனுடைய நலன்கள் பேணப்பட்டு ஐயத் தெளிவு அவ்வப்பொழுதே கிடைக்கும்?**
A) தனிக்குழந்தை B) கூட்டுக்குழந்தை
C) (A) மற்றும் (B) D) உறவுக்காரார் குழந்தை
**விடை : (A)**

**24. எதன் மூலமாக கற்பித்தல் திறமை வளர்கிறது?**
A) ஆழந்த கற்றல் B) நுண்ணறிவு
C) அனுபவக்கற்றல் D) செயல்வழிக் கற்றல்
**விடை : (B)**

**25. பலவிதமான ஆசிரியர் குழுக்களைக் கொண்டது எது?**
A) இருவர் சேர்ந்து கற்பித்தல் B) தனிக் கற்பித்தல்
C) குழு கற்பித்தல் D) மூன்றும் **விடை : (C)**

**26. யார் இயற்கையாகவே தனிமனித வாழ்க்கை வரலாற்றை அறிய ஆர்வம் கொண்டவர்களாக இருப்பர்?**
A) குழந்தைகள் B) ஆசிரியர்
C) பெற்றோர் D) மூவரும் **விடை : (A)**

**27. எக்கற்பித்தல் முறையில் மாணவர்கள் நேரடியாக கற்றலில் ஈடுபடுகிறார்கள்?**
A) பார்த்தல் B) கேட்டல்
C) பயிற்சி D) கண்டறிதல் **விடை : (D)**

**28. கற்றல் சூழ்நிலை சிறப்பாக அமைந்தால், எது வெற்றிகரமாக செயல்படும்?**
A) கற்றல் B) கேட்டல்
C) செயல் D) பார்த்தல் **விடை : (A)**

**29. சுயமாக சிந்திக்கும் ஆற்றல் மூலம் எது அதிகரிக்கும்?**
A) செயல்திட்டம் B) சுயகண்டுபிடிப்பு
C) அலகு திட்டம் D) வருடத்திட்டம் **விடை : (B)**

**30. மாணவர்கள் பங்கேற்பின் மூலமும் கூட்டுறவு மூலமும் செயல்கள் மூலமும் என்ன செய்கின்றனர்?**
A) பார்க்கின்றனர் B) குறைவாக கற்கின்றனர்
C) அதிகம் கற்கின்றனர் D) செயலில் ஈடுபடுகின்றனர்
**விடை : (C)**

## வினாத்தாள் – 7

**1. ஆசிரியருக்கும் மாணவருக்கும் எதன் மூலம் நல்ல உறவுமுறை ஏற்படுகிறது?**
A) கண்டறிதல் B) கேட்டறிதல்
C) செயல்படுத்தல் D) கவனித்தல் **விடை : (A)**

**2. எதனால் கற்றல் நிலைப்படுத்தப்படுகிறது?**
A) பயிற்சி மூலம் B) நேரிடை அனுபவம்
C) செயல் மூலம் D) கேட்டல் மூலம் **விடை : (B)**

**3. மாணவர்களின் ஆர்வத்தைக் கண்டறியும் வகையில் அவர்களுடன் யார் பேசுதல் வேண்டும்?**
A) பெற்றோர் B) நண்பர்
C) ஆசிரியர் D) பிறர் **விடை : (C)**

**4. யார் மாணவர்களை ஊக்குவித்துச் செயல் திட்டத்தைச் சொல்லச் செய்ய வேண்டும்?**
A) சுற்றத்தார் B) பெற்றோர்
C) பிறர் D) ஆசிரியர் **விடை : (D)**

**5. எது மாணவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சொல்லப்பட வேண்டும்?**
A) செயல்திட்டம் B) அணுகுமுறை
C) கவனம் D) ஊக்கம் **விடை : (A)**

**6. செயல் திட்டத்தைச் சொல்லுமாறு யார் ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தித் தர வேண்டும்?**
A) பெற்றோர் B) ஆசிரியர்
C) பிறர் D) செயல்படுபவர் **விடை : (B)**

**7. செயல்திட்டத்தின் ஒவ்வொரு செயலும் எப்பொழுது திட்டமிடப்பட வேண்டும்?**
A) பிறகு B) அப்பொழுது
C) முன்னதாகவே D) எதுவுமில்லை **விடை : (C)**

**8. எதனை மாணவர்களும் சரியாக எழுதிக் கொள்ள வேண்டும்?**
A) அலகிட்டதை B) கள ஆய்வு செய்ததை
C) பயிற்சி பெற்றதை D) திட்டமிட்டதை **விடை : (D)**

**9. ஆசிரியர் தனது கற்பித்தல் திறன்களுக்கு உகந்த எதனை நாட வேண்டும்?**
A) சிறந்த கற்பித்தல் முறையை B) அணுகுதலை
C) செயல்படுத்துதலை D) கவனித்தலை **விடை : (A)**

**10. சொற்களின் பொதுவான பொருளை உணர, அவர்களுக்கு எது தருதல் அவசியமாகிறது?**
A) செயல்பயிற்சி B) மொழிப்பயிற்சி
C) அனுபவப்பயிற்சி D) எழுத்துப்பயிற்சி **விடை : (B)**

**11. கற்போரை முறையாக ஆயத்தப்படுத்திய பின்னரே கற்பித்தலை தொடங்கிட உதவுவது எது?**
A) நடத்தைசார் உளவியல் B) கல்விஉளவியல்
C) உளவியல் D) மூன்றும் **விடை : (A)**

**12. எது அறிவுக்கு முன்னோடியாக அமைகிறது?**
A) கவனம் B) செயல்கள்
C) பண்பு D) நடத்தை **விடை : (B)**

**13. எது பருப்பொருளோடு இயைந்த விளைவுகளைக் கொடுக்கும்?**
A) கவனம் B) ஊக்கம்
C) செயல்கள் D) நடத்தை **விடை : (C)**

**14. படைப்பாற்றலின் அடிப்படையிலேயே எது அமைய வேண்டும்?**
A) கருத்து B) படங்கள்
C) நடத்தை D) பாடங்கள் **விடை : (D)**

**15. எந்நிலைகளில் அறிவியல் முக்கியத்துவம் பெற வேண்டும்?**
A) தாழ் B) உயர்
C) இடை D) மூன்றும் **விடை : (B)**

**16. மாணவர்கள் எச்சூழலில் செயல் வழியில் கற்க வகை செய்ய வேண்டும்?**
A) செயற்கை B) விளையாட்டு
C) இயற்கை D) மூன்றும் **விடை : (C)**

**17. மாணவர்கள் தங்களுக்கு .................... ஈடுபட அனுமதிக்க வேண்டும்.**
A) ஆர்வமுள்ள துறையில் B) ஊக்கம் தராத துறையில்
C) கவனமற்ற துறையில் D) பயிற்சியற்ற துறையில்
**விடை : (A)**

**18. யார் கற்கும் பொருளை எளிமைப் படுத்தி எளிதில் பொருள் விளங்குமாறு வடிவமைத்து மாணவர்களுக்கு வழங்கிடுவதில் தனிக் கவனம் செலுத்த வேண்டும்?**
A) பெற்றோர் B) ஆசிரியர்
C) நிர்வாகம் D) மூன்றும் **விடை : (B)**

**19. காட்சிக் கேள்வி துணைக் கருவிகளை எதில் பயன்படுத்தினால் மாணவர்களின் கற்கும் ஆர்வம் அதிகரிக்கும்?**
A) பாடங்கற்பித்தலில் B) செயலில்
C) அனுபவத்தில் D) கருத்தில் **விடை : (A)**



enquiry@surabooks.com Ph: 9840455556

20. யாருடைய கற்றல் செயல்பாடுகள் அனைத்தும் ஆசிரியரால் நெறிப்படுத்தப்படுகின்றன?
A) நிர்வாகத்தின் B) மாணவர்களின்
C) பெற்றோரின் D) மூன்றும் விடை : (B)

21. யாருடைய அறிவுரைகளின்படியே செயல்படுதல் மாணவர் கடமையாகும்?
A) பெற்றோர்களின் B) குழந்தைகளின்
C) ஆசிரியர்களின் D) மூன்றும் விடை : (C)

22. யார் எந்தவொரு செயல்திட்டத்தையும் தொடங்கிட முடியாது?
A) மாணவர் B) பெற்றோர்
C) ஆசிரியர் D) நிர்வாகம் விடை : (A)

23. மாணவர்கள் கற்ற பாடக் கருத்துகளின் சாராம்சத்தை பொதுமைக் கருத்தாக அறிந்துணர யார் உதவுகிறார்?
A) பெற்றோர் B) ஆசிரியர்
C) சுற்றத்தார் D) பயிற்சியாளர் விடை : (B)

24. யார் புதிய பாடத்தின் கருத்துகளை வழங்குவதற்கு ஏற்ற கற்றல் சூழலை உருவாக்கிக் கொள்கிறார்?
A) பெற்றோர் B) மாணவர்
C) ஆசிரியர் D) மூவரும் விடை : (C)

25. யார் மனப்பாடம் செய்த கருத்துகள் அவரது அறிவு வளர்ச்சிக்கு குறைந்தளவே பயன்படுகிறது?
A) ஆசிரியர்கள் B) மாணவர்கள்
C) பெற்றோர்கள் D) மூவரும் விடை : (B)

26. கற்போரது பிரச்சினைகளை பரிவுடன் அனுகுபவராக யார் இயங்குதல் வேண்டும்?
A) பெற்றோர் B) நிறுவனத்தார்
C) ஆசிரியர் D) மூவரும் விடை : (C)

27. ஆசிரியரது பல்வேறு செயல்களை உள்ளடக்கியது எது?
A) கவனித்தல் B) பயிற்றுவித்தல்
C) ஊக்கப்படுத்தல் D) கற்பித்தல் விடை : (D)

28. மாணவர்களோடு நேரிடையாக இடைவினை புரியும் செயல்முறை எது?
A) கற்பித்தல் B) பயிற்றுவித்தல்
C) கவனித்தல் D) ஊக்கப்படுத்துதல்
விடை : (A)

29. பெரும்பாலும் மொழிப்பயன்பாட்டின் அடிப்படையில் அமைந்தது எது?
A) ஊக்கப்படுத்துதல் B) கற்பித்தல்
C) கவனித்தல் D) அனுபவித்தல் விடை : (B)

30. எதன்மூலம் கற்பித்தலை மாற்றியமைக்க முடியும்?
A) பின்னூட்டம் B) செயல்
C) பயிற்சி D) கவனம் விடை : (A)

## வினாத்தாள் – 8

1. மொழி யாருடைய ஆயுதம்?
A) தாவரம் B) விலங்கு
C) மனிதன் D) மூன்றும் விடை : (C)

2. யாருடைய இயக்க வளர்ச்சிக்கு விளையாட்டு பயன்படுகிறது?
A) ஆசிரியர் B) மாணவன்
C) பறவை D) குழந்தை விடை : (D)

3. எது அறிதிறன் மூலம் நிகழ்கிறது?
A) செயல் B) கவனம்
C) கற்றல் D) ஊக்கம் விடை : (C)

4. எது எச்செயலில் ஈடுபட வேண்டும் என்றாலும் அதற்கு ஆயத்த நிலை தேவை?
A) மாணவர் B) குழந்தை
C) ஆசிரியர் D) பெற்றோர் விடை : (B)

5. எது குழந்தைகளிடம் அறிவினை வளர்க்க உதவுகிறது?
A) புதிய அனுபவம் B) பயிற்சி
C) செயல் D) அனுபவம் விடை : (A)

6. யாருடைய வயதிற்கேற்ப விளக்கப் படங்கள் இருக்க வேண்டும்?
A) தாயின் B) குழந்தையின்
C) உடன் பிறந்தவரின் D) நண்பரின் விடை : (B)

7. எதனை உற்றுக் கேட்பதில் தேர்ச்சியடைந்த குழந்தை மகிழ்ச்சியடைகிறது?
A) குறைந்தநேரம் B) சிறிது நேரம்
C) அதிகநேரம் D) மூன்றும் விடை : (C)

8. எதன் உச்சக்கட்டம் மனக்கிளர்ச்சி?
A) கோபத்தின் B) அழுகையின்
C) சண்டையின் D) மகிழ்ச்சியின் விடை : (D)

9. எது உருவாவதற்கு தயார்நிலை முக்கிய மாகிறது?
A) கவனம் B) செயல்
C) ஊக்கம் D) கருத்து விடை : (D)

10. ஆசிரியர் எப்படி மொழியினைப் பேச வேண்டும்?
A) எளிமையாக B) தெளிவாக
C) விரிவாக D) சுருக்கமாக விடை : (A)

11. யார் சுதந்திரமாகப் பேச வேண்டும்?
A) ஆசிரியர்கள் B) மாணவர்கள்
C) குழந்தைகள் D) பெற்றோர்கள் விடை : (C)

12. யாரிடம் அனுபவங்களைத் தெரிந்து கொள்ள முயற்சி செய்ய வேண்டும்?
A) ஆசிரியரிடம் B) குழந்தைகளிடம்
C) பெற்றோரிடம் D) பிறரிடம் விடை : (B)

13. ஆளுமை எதன் கட்டுப்பாடுகளினால் விளையும் தன்மையாகும்?
A) சமுதாயம் B) பெற்றோர்
C) பள்ளி D) சுற்றுச்சூழல் விடை : (A)

14. சினம் நம்மிடம் அதிகரிக்கும் போது யார் நம்மைவிட்டு விலகியே நிற்பர்?
A) பெற்றோர் B) பிறர்
C) உடன்பிறந்தோர் D) ஆசிரியர் விடை : (B)

15. எது தனிப்பட்ட வன்மை?
A) ஊக்கம் B) கவனம்
C) மனவன்மை D) செயல் விடை : (C)

16. மனநலம் எதனைக் குறிக்கும்?
A) அனுபவத்தை B) செயலை
C) பயிற்சியை D) வாழ்க்கை நிலையை
விடை : (D)

17. குழந்தையினுடைய நுண்ணறிவை எப்படி அளவிட முடியாது?
A) மறைமுகமாக B) நேரடியாக
C) (A) மற்றும் (B) D) பிறர் மூலமாக விடை : (B)

18. ஆல்பிரட்பினே யார்?
A) கல்வியின் தந்தை
B) கற்பித்தலின் தந்தை
C) மனவளர்ச்சி ஆய்வின் தந்தை
D) நுண்ணறிவுச் சோதனையின் தந்தை விடை : (D)

19. எதனை சிக்கல்கள் என்பர்?
A) வளர்ச்சி சார் சிக்கல்கள் B) அனுபவ சார் சிக்கல்கள்
C) கள ஆய்வு சார் சிக்கல்கள் D) செயல்சார் சிக்கல்கள்
விடை : (A)

20. சிந்தித்தல் எச்செயல்?
A) கவனம் சார்ந்த செயல் B) அறிவார்ந்த செயல்
C) பண்பு சார்ந்த செயல் D) பயிற்சி சார்ந்த செயல்
விடை : (B)



enquiry@surabooks.com Ph: 9840455556

www.surabooks.com



## வினாத்தாள் – 9

1. **உடல் வளர்ச்சி வேகமாக நடைபெறும் பருவம் எது?**
   A) குறுநடைப்பருவம் B) சிசுப்பருவம்
   C) குமரப்பருவம் D) பள்ளிப்பருவம் **விடை : (C)**

2. **வளர்ச்சி ஹார்மோன் அளவுக்கு அதிகமாக பிட்யூட்டரி சுரப்பியில் சுரக்கும்போது .............. ஏற்படுகிறது.**
   A) குள்ளத்தன்மை B) கிரிடினிசம்
   C) அசாதாரண உடல் வளர்ச்சி D) முன்கழுத்துக் கழலை
   **விடை : (B)**

3. **குழந்தையின் சுதந்திர உணர்வுக்கு மதிப்பளிக்கும் போது தானே தொடங்கும் திறன் ................... வயதில் ஏற்படுகிறது.**
   A) 2-3 ஆண்டுகள் B) முதல் ஆண்டு
   C) 6 ஆண்டு முதல் D) 4-6 ஆண்டுகள் **விடை : (C)**

4. **பியாஜேயின் "ஒருவருடைய அறிவுசார்" என்ற சொல் கீழ்க்கண்ட ஒன்றை குறிக்க பயன்படுத்தப்படுகிறது.**
   A) உருவக நிலை B) ஸ்கீமா
   C) செயல்திட்டம் D) சுயநலவாதம் **விடை : (C)**

5. **எரிக்சனின் கூற்றுப்படி மனிதனின் சமூக கோட்பாடு எத்தனை நிலைகளைக் கொண்டுள்ளது?**
   A) 6 நிலை B) 4 நிலை
   C) 10 நிலை D) 8 நிலை **விடை : (D)**

6. **கவனவீச்சு அறிய உதவும் கருவி**
   A) டாச்சிஸ்டாஸ்கோப் B) டெலஸ்கோப்
   C) கற்றல் அட்டைகள் D) மைதடச் சோதனை
   **விடை : (A)**

7. **ஒருவரின் ஆளுமைக் கோளாறுகளுக்கு அடிப்படையாக அமைவது**
   A) மனவெழுச்சி அதிர்வுகள் B) மன உணர்ச்சிகள்
   C) மனமகிழ்ச்சிகள் D) மனநலம் **விடை : (D)**

8. **ஒழுக்க வளர்ச்சியை பற்றி கூறிய உளவியல் அறிஞர்**
   A) மக்டுகல் B) தார்ண்டைக்
   C) பாவ்லவ் D) பியாஜே **விடை : (D)**

9. **நுண்ணறிவு இரு காரணிகளால் ஆனது என கூறிய உளவியல் அறிஞர்**
   A) ஸ்பியர்மென் B) வெக்ஸ்லர்
   C) பியாஜே D) பினே **விடை : (A)**

10. **நுண்ணறிவு ஈவு என்பது**
    A) நு.ஈ $= \frac{\text{மனவயது (MA)}}{\text{காலவயது (CA)}} \times 100$
    B) நு.ஈ $= \frac{\text{கால வயது (CA)}}{\text{மனவயது (MA)}} \times 100$
    C) நு.ஈ $= \frac{\text{கால வயது (MA)}}{\text{மனவயது (CA)}} \times 100$
    D) நு.ஈ $= \frac{\text{வளர்ச்சி வயது (CA)}}{\text{மனவயது (MA)}} \times 100$ **விடை : (A)**

11. **பிறருக்கு உதவி செய்யும் மனப்பான்மையை ................... எனலாம்.**
    A) விரி சிந்தனை B) தர்ம சிந்தனை
    C) இலட்சியம் D) குவிசிந்தனை **விடை : (A)**

12. **கற்றல் எவ்வகைகளில் பொருந்தாத ஒன்று**
    A) வாய்மொழிக் கற்றல் B) தொடர் கற்றல்
    C) இணைத்துக் கற்றல் D) மனப்பாடம் செய்து கற்றல்
    **விடை : (D)**

13. **குழந்தையை குழந்தையாக கருத வேண்டும் என்று கூறியவர்**
    A) ரூஸோ B) வெக்ஸ்லர்
    C) பினே D) காக்னே **விடை : (A)**

14. **தன்னிச்சையாக எழும் துலங்கலைச் சார்ந்த ஆக்கநிலையுறுத்தக் கற்றல் சோதனையில் ஸ்கின்னர் பயன்படுத்திய விலங்கு**
    A) குரங்கு B) எலி
    C) நாய் D) புறா **விடை : (D)**

15. **இவற்றுள் பொருத்தமான ஜோடியை கூறு.**
    A) கோலர் – உட்காட்சி மூலம் கற்றல்
    B) ஸ்கின்னர் – கற்றல் விதி
    C) பாவ்லவ் – தன்னிச்சையாக எழும் துலங்களை சார்ந்த ஆக்கநிலையுறுத்தல்
    D) மேற்கண்ட அனைத்தும் சரி **விடை : (D)**

16. **இவற்றில் சிக்கலான பொதுமைக் கருத்து**
    A) சதுரம் B) முக்கோணம்
    C) சிறிய நீல நிற சதுர கட்டை D) வட்டம் **விடை : (D)**

17. **இவைகளில் எது கற்றலுக்கு உதவாத காரணி**
    A) தனிப்பட்ட காரணி B) உளம் சார்ந்த காரணி
    C) சமூக காரணி D) குழு காரணி **விடை : (C)**

18. **மொழியில்லா சோதனை................. வகை சோதனையைச் சாரும்**
    A) ஆக்கச் சிந்தனை B) நுண்ணறிவு
    C) தனித்தன்மை D) ஆளுமைத் திறன் **விடை : (C)**

19. **அறிவுசார் கற்றல் அணுகுமுறை அல்லாதது**
    A) பிரச்சினைத் தீர்தல் B) செய்து கற்றல்
    C) செயல்திட்ட முறை D) மனப்பாடம் செய்வித்தல்
    **விடை : (D)**

20. **குழந்தைகளுக்கான கற்கும் உரிமையை ஐ.நா. சபை எப்பொழுது பிரகடனப்படுத்தியது?**
    A) 1969 நவம்பர் 10 B) 1979 டிசம்பர் 20
    C) 1959 நவம்பர் 20 D) 1949 டிசம்பர் 10 **விடை : (B)**

21. **தார்ண்டைக்கின் பயிற்சி விதி எதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி கூறுகிறது**
    A) தூண்டுகோல் B) மறுபடி செய்தல்
    C) பரிசு D) தண்டனை **விடை : (B)**

22. **கற்றலின் முக்கிய காரணி ஒன்று**
    A) தக்கவைத்தல் B) நாட்டம்
    C) கவனித்தல் D) கவர்ச்சி **விடை : (B)**

23. **வெகுநாட்கள் நமது நினைவில் இருப்பவை**
    A) படித்து கற்றல் B) கேட்டுக் கற்றல்
    C) பல்புலன் வழிக்கற்றல் D) பார்த்துக் கற்றல் **விடை : (C)**

24. **கற்றலின் அடைவு ..................**
    A) திறன் B) அறிவு
    C) மனப்பான்மை D) இவை அனைத்தும்
    **விடை : (A)**

25. **நடத்தை கோட்பாட்டின் அடிப்படை**
    A) அறிவு B) தெளிவு
    C) தூண்டல்–துலங்கல் D) உட்காட்சி **விடை : (D)**



enquiry@surabooks.com Ph: 9840455556